சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 13

## Covid – 19 இடர் வீடுமுறைகால பயிற்சி - 3

**தேர்ச்சி – 4.0 : முதன்மை ஏடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களைப் பேரேடுகளில் தாக்கல் செய்வர்**

வாரம் - 3
**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி**

**தயாரிப்பு : சஜித்.sp**
**BBA(Financial Spl), University of Colombo**

01. ராகவா வணிகத்தின் 31 மார்ச் 2019 இல் முடிந்த ஆண்டுக்கு வரைபுக் கணக்குகளின்படி தேறிய இலாபமாக ரூபா 78 000 கணிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் பின்வரும் பிழைகள் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டன.

1) கொள்வனவு நாளேட்டின் ஒரு பக்கக் கூட்டுத்தொகை ரூபா 35 000 தவற விடப்பட்டிருந்தது.
2) பதிவளித்த நட்டக் கடன் ரூபா 4 500 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 5 400 எனப் பதியப்பட்டது.
3) காசுக்கு விற்பனை ரூபா 18 000 காசுப் பெறுவனவு நாளேட்டில் கடன்பட்டோர் பகுப்பாய்வு நிரலில் பதியப்பட்டிருந்தது.
4) செலுத்திய பெறுமதிசேர் வரி ரூபா 15 000 காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டது.
5) உரிமையாளர் தன்னிடமிருந்த ரூபா 50 000 கிரயமான கணனி ஒன்றை வணிகத்திற்கென வழங்கி இருந்தார். கணனி பெறுமானத் தேய்வு கிரயத்தில் 12% ஆகும். இவை தொடர்பாக கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை.
6) இறுதி இருப்பு கணிப்பீட்டின் போது விற்பனை இன்றேல் திரும்பல் அடிப்படையில் ரூபா 20 000 பட்டியல் விலையிட்டு அனுப்பப்பட்ட பண்டங்கள் வாடிக்கையாளரிடம் விற்கப்படாது திரும்பி வருவதாக இருந்தது. இப் பண்டங்கள் உள்ளடக்கப்படவில்லை. பட்டியல் விலை கிரயத்துடன் 25% இலாபம் சேர்க்கப்பட்டதாகும்.
7) செலுத்திய வங்கித் தவணைக் கட்டணம் ரூபா 33 000 (ரூபா 3 000 உட்பட) வங்கிக் கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
8) மார்ச் மாத வங்கிக்கூற்றில் காணப்பட்ட காசோலைப் புத்தக கட்டணம் ரூபா 600 தொடர்பில் எதுவித பதிவுகளும் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது :**

1) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்
2) இலாபத்தைத் திருத்துவதற்கான கூற்று
3) தொங்கல் கணக்கு (20 புள்ளிகள்)

02) கபாலி வணிகத்தின் 01 ஜனவரி 2020 இல் உள்ள மீதிகள் வருமாறு. இவ்வணிகம் VAT இற்கு பதிவு செய்த வணிகமாகும்.

கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 45 000

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 63 000

ஜனவரி 2020 மாதம் தொடர்பான நடவடிக்கைகள் வருமாறு.

கொள்வனவுகள், விற்பனைகள் VAT 15% சேர்க்கப்பட்ட பெறுமதிகளாகும்

| கடன் கொள்வனவுகள் | | | ரூபா |
|---|---|---|---|
| 02.01.2020 | பட்டியல் இல 160 | மாதவன் | 13 800 |
| 06.01.2020 | பட்டியல் இல 225 | சிவா | 23 000 |
| 15.01.2020 | பட்டியல் இல 300 | பரசுராம் | 34 500 |
| 23.01.2020 | பட்டியல் இல 401 | குமரன் | 25 300 |

| கடன் விற்பனைகள் | | | ரூபா |
|---|---|---|---|
| 04.01.2020 | பட்டியல் இல 460 | குமுதா | 36 800 |
| 10.01.2020 | பட்டியல் இல 461 | செல்வா | 46 000 |
| 16.01.2020 | பட்டியல் இல 462 | சுபுண் | 20 700 |
| 26.01.2020 | பட்டியல் இல 463 | அருண் | 43 700 |

| காசுப் பெறுவனவுகள் | | | ரூபா | | |
|---|---|---|---|---|---|
| 05.01.2020 | பற்றுச்சீட்டு இல 66 | பெற்ற தரகு | 20 000 | | |
| 07.01.2020 | பற்றுச்சீட்டு இல 67 | குமுதாவிடம் பெற்ற காசு | 18 000 | கழிவு ரூபா | 2 000 |
| 10.01.2020 | பற்றுச்சீட்டு இல 68 | மேலதிக மூலதனம் | 50 000 | | |
| 22.01.2020 | பற்றுச்சீட்டு இல 69 | செல்வாவிடம் பெற்ற காசு | 30 000 | கழிவு ரூபா | 3 000 |
| 24.01.2020 | பற்றுச்சீட்டு இல 70 | சுபுணிடம் பெற்ற காசு | 9 000 | கழிவு ரூபா | 1 000 |

| காசுக் கொடுப்பனவுகள் | | | ரூபா |
|---|---|---|---|
| 03.01.2020 | கைச்சாத்து இல 150 | தளபாடம் வாங்கியது | 30 000 |
| 10.01.2020 | கைச்சாத்து இல 151 | செலுத்திய வாடகை | 15 000 |
| 16.01.2020 | கைச்சாத்து இல 152 | மாதவனுக்குக் கொடுத்த காசு | 6 000 |
| | | பெற்ற கழிவு | 500 |
| 18.01.2020 | கைச்சாத்து இல 153 | சிவாவுக்கு கொடுத்த காசு | 11 000 |
| | | பெற்ற கழிவு | 1 000 |
| 24.01.2020 | கைச்சாத்து இல 154 | பரசுராமுக்கு கொடுத்த காசு | 23 000 |
| | | பெற்ற கழிவு | 2 500 |
| 31.01.2020 | கைச்சாத்து இல் 155 | செலுத்திய VAT | 6 000 |

**வேண்டப்படுவது**

1) காசுப் பெறுவனவு நாளேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு, விற்பனை நாளேடு, கொள்வனவு நாளேடு

2) பொதுப்பேரேட்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு, கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.

(20 புள்ளிகள்)